Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 4, 2023

புதன்கிழமை ஜனவரி 04, 2023 | ஒளி: 08 கதிர்: 179 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## குறைக்க முடியாது



டீசல் விலை குறைக்கப்பட்டாலும், பஸ் கட்டணத்தை குறைப்பதற்கான வாய்ப்பில்லை என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை (02) நள்ளிரவு முதல் ஒரு லீற்றர் லங்கா ஒட்டோ டீசல் 15 ரூபாவாலும் ஒரு லீற்றர் தொடர்ச்சி P2

# ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடையவர் காத்தான்குடியில் கைது

**கனகராசா சரவணன்**

ஐ.எஸ் அமைப்புடன் தொடர்பில் இருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், இந்தியாவில் அண்மையில் கைது செய்யப்பட்டவருடன் தொடர்பில் இருந்த ஒருவர் காத்தான்குடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய ஒருவரே பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பேரில், திங்கட்கிழமை (02) இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தற்கொலைதாரியான சஹ்ரான் ஹசீமுடன் தொடர்பில் இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

2022 ஒக்டோபர் மாதத்தில் இந்தியா, கோயம்புத்தூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புடன் தொடர்புடைய சந்தேக நபர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஷேக் ஹிதாயத்துல்லா மற்றும் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றதாகக் கூறப்படும் சனோபர் அலி ஆகியோரே டிசெம்பர் 29 ஆம் திகதி இந்தியாவில் கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேகநபர்கள் 2022 பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியின் ஆசனூர், கடம்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள வனத்தின் உட்பகுதியில், சதித்திட்டத்தில் ஈடுபட்டதுடன் இலங்கையில் 2019 ஏப்ரல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹசீமுடன் தொடர்பில் இருந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்தவருடன் காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடையவர் முகநூலில் தொடர்ச்சி P2

# சின்னத் தேர்தலை நிறுத்துமாறு மனு



**1,000 கோடி ரூபாயை தேர்தலுக்காக ஒதுக்க வேண்டி வரும். இவ்வளவு தொகை கிடைக்குமா என்பது கேள்விக்குறி**


**தேர்தலை நடத்தும் தீர்மானம், பேரழிவுக்கு வழிவகுத்து மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும்**

2023 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை இரத்து செய்யக் கோரி, உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டு, ஓய்வுபெற்ற கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தரவால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## கோட்டா மீண்டும் நாடு திரும்புவார்?

**கோட்டாபய, ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்லத் திட்டமிட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அவர் இலங்கைக்கு திரும்பவுள்ளார்?**



நாட்டை விட்டு வெளியேறியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்ல திட்டமிட்டுள்ளதாக பல்வேறு தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும், அவர் இப்போதும் டுபாயில் வசித்து வருவதுடன், விரைவில் இலங்கைக்கு திரும்பவுள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.



## முட்டைக்கு தற்காலிக இறக்குமதி அனுமதி

**மஹேஸ்வரி விஜயனந்தன்**

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள முட்டை தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில், முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, இந்த இறக்குமதி நடவடிக்கையானது தற்காலிகமானது என்றார். தொடர்ச்சி P2

## வளங்களை சுரண்டிக்கொண்டு மாவீரன் பறந்துவிட்டார்

**சஜித் தெரிவிப்பு: புத்திஜீவிகளே வெளியேறாதீர்கள் என்கிறார்**



2019 ஜனாதிபதி தேர்தலில் போது, பாடசாலை சீருடை, காலணிகள் 2 பொதிகள் தருவதாகச்சொல்லி வாக்குறுதி வழங்கப்பட்டபோது மாவீரன் தேவை எனக் கூறி வேறொருவரை நியமித்துக் கொண்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மாவீரன் நாட்டின் வளங்களை, சுரண்டிக்கொண்டு நாட்டை விட்டும் வெளியேறி விட்டார் என்றார். தொடர்ச்சி P2

## யாழ். உறுப்பினர்களை அழைத்தார் ஆளுநர்

**நிதர்ஷன் வினோத்**

யாழ். மாநகர சபையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய வருமாறு, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா , மாநகர சபை உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி காலை கட்சி ரீதியாக உறுப்பினர்களை சந்திக்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு நேரம் குறிப்பிட்டு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். தொடர்ச்சி P2

## வரும் முட்டையால் ஆபத்துகளும் வரும்

**எதிர்ப்பும் எச்சரிக்கையும் விடுப்பு**

நாட்டில் நிலவும் முட்டைத் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு, முட்டையை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ள நிலையில், கோழி விற்பனையாளர் சங்கம் இறக்குமதிக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தொடர்ச்சி P2

2 முதல் 11ஆம் தரங்களில்

## மாணவர்களை உள்ளீர்க்க புதிய பொறிமுறை

**மஹேஸ்வரி விஜயனந்தன்**

பாடசாலைகளில் தரம் 02 முதல் 11 வரையான வகுப்புகளுக்கு மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கான புதிய பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது என அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (03) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.




தொடர்ச்சி P2




## ஒரு சில துறைகளின் ஓய்வு வயது நீடிக்கும்

**ஆராய்கிறது அரசாங்கம்**

2022ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியன்று, 30 ஆயிரத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் ஓய்வு பெற்ற நிலையில், ஒரு சில விசேட துறைகளில் பணியாற்றும் அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை குறைந்தபட்சம் 65 ஆக அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அறியமுடிகிறது. தொடர்ச்சி P2



## சிறுநீரக தரகருக்கு விளக்கமறியல் நீடிப்பு

சிறுநீரக மோசடி வர்த்தகத்துக்கு தரகராகச் செயற்பட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு விதிக்கப்பட்டிருந்த விளக்கமறியல் எதிர்வரும் 17ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காண்பதற்காக, நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் சாட்சியாளர்கள் நால்வரும் சந்தேகநபரை அடையாளம் காண்பித்துள்ளனர். தொடர்ச்சி P2

## மின் கட்டண திருத்தம்: அடுத்த வாரமே தீர்மானம்

**மஹேஸ்வரி விஜயனந்தன்**

மின்கட்டணத் திருத்தம் தொடர்பில், மின்சக்தி அமைச்சரால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனை தொடர்பில் அடுத்த வாரத்தில் கலந்துரையாடி தீர்மானிக்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். தொடர்ச்சி P2

## புகைப்பொருள், மதுபான விலைகள் எகிறின

சகல வகையான மதுபானங்கள் மற்றும் புகைப்பொருட்களின் விலைகள் நூற்றுக்கு 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த விலை அதிகரிப்பு, ஜனவரி 1ஆம் திகதி முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்நிலையில், எத்தனோல் விலை உயர்த்தப்பட்டாலும், மதுபானத்தின் விலையை உயர்த்தப்போவதில்லை என மதுபான நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சி P2



## ஐ.எம்.எப் நிதியுதவி கிடைத்தாலும் நெருக்கடியை சமாளிக்க முடியாது

**சீனாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை காரணமாக இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, பர்மா, ஐரோப்பா போன்ற பல நாடுகள் இலங்கையுடன் நெருக்கத்தை கையாள விரும்பவில்லை**

ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் சீனாவுடன் இலங்கை செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்னர், இலங்கையுடனான நட்புறவை பல நாடுகள் தள்ளிவைத்து கையாள்வதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ.எம்.எப்) இருந்து கடன் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். தொடர்ச்சி P2

மின் கட்டண அதிகரிப்பு விவகாரம்:

## அமைச்சரை மாற்ற வேண்டும்

**ஜனாதிபதியிடம் மின் பொறியியலாளர் சங்கம் கோரிக்கை**

**கட்டண அதிகரிப்பு யோசனையை குப்பையில் வீசுமாறும் தெரிவிப்பு**

மின்சாரச் சட்டத்தை மீறி அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட மின் கட்டண அதிகரிப்பு யோசனையை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு, அனைவருக்காகவும் சேவை செய்யக் கூடிய தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மின் கட்டண திருத்தம்: அடுத்த வாரமே தீர்மானம்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (3) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே,மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவால் மின் கட்டண திருத்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டதாக தெரிவித்த அவர், இது தொடர்பில் மேலும் ஆராய்ந்து பார்த்து, அடுத்த அமைச்சரவை சந்திப்பில் தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது என்றார்.

## சின்னத் தேர்தலை நிறுத்துமாறு மனு

முழு நாடும் நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் பேரழிவுக்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறைந்தது 1,000 கோடி ரூபாயை 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இருந்து தேர்தலுக்காக ஒதுக்க வேண்டி வரும் என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தேர்தலை நடத்துவதற்கு இவ்வளவு தொகை கிடைக்குமா என்ற கேள்விக்கு, வருமானம் மற்றும் கடன்வாங்கும் திறன் ஆகியவற்றைப் பொறுத்தே பணி முன் செலவு நிதியை விடுவிப்பதாக அமையும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் மீது தேவையற்ற செல்வாக்கை செலுத்த முயல்வதாகவும் அரசியல் நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களால் சீர்குலைக்கும் காரணிகள் இருப்பதாகவும் மனுதாரர் அடிக்கோடிட்டு காட்டியுள்ளார்.

## முட்டைக்கு தற்காலிக இறக்குமதி அனுமதி

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (03) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், முட்டை உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கவும், நுகர்வோருக்கு மலிவு விலையில் முட்டைகளை வழங்கவும் முட்டை இறக்குமதிக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றார்.

சந்தையில் முட்டை ஒன்று 50 ரூபாய்க்கு அதிக விலையில் விற்கப்படுவதால் சிறு பிள்ளைகளை கொண்ட பெற்றோர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே, முட்டை தட்டுப்பாடு மற்றும் முட்டை விலை தொடர்பாக அமைச்சரவையில் நீண்ட நேரம் பேசப்பட்டதாகவும், அதற்கேற்ப முட்டை இறக்குமதிக்கு தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## புகைப்பொருள், மதுபான விலைகள் எகிறின

சிகரட் மீதான கலால் தீர்வையும் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

90 ரூபாயாக இருந்த சிகரெட் விலை 105 ரூபாயாகவும், 70 மற்றும் 85 ரூபாயாக இருந்த சிகரெட்கள் விலைகள் 80 மற்றும் 100 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், எத்தனோல் விலை உயர்த்தப்பட்டாலும், மதுபானத்தின் விலையை உயர்த்தப்போவதில்லை என மதுபான நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. மதுபான விலைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தால், கடந்த காலங்களில் 40 சதவீதத்தால் நாட்டில் மது விற்பனை குறைவடைந்துள்ளது என்றும் நிறுவனங்கள் தெரிவித்தன.

## ஐ.எம்.எப் நிதியுதவி கிடைத்தாலும் நெருக்கடியை சமாளிக்க முடியாது

அந்த உடன்படிக்கை காரணமாக இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, பர்மா, ஐரோப்பா போன்ற பல நாடுகள் இலங்கையுடன் நெருக்கத்தை கையாள விரும்பவில்லை. இது இலங்கையை தனிமைப்படுத்தும் செயலாக அமைந்துவிட்டது என்றார்.

2017ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக, அமைச்சர் பதவியில் இருந்து கூட தான் நீக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் ஜப்பானுடன் செய்து கொண்ட இலகு ரயில் ஒப்பந்தம் எவ்வித ஆய்வும் இன்றி இரத்துச் செய்யப்பட்டதுடன், இலங்கை இவ்வாறு பல நாடுகளை புண்படுத்தியதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தில் கடன் பெற்றாலும், நாட்டின் பொருளாதாரத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆனால், வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைப்பது போல், உலகின் பிற நாடுகளும் நம் நாட்டின் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்றார்.

இந்த நாடு மற்றும் பிற நாடுகளுடன் வர்த்தகம் செய்ய முடியும், நமது நாட்டிற்கான கடன் தொகையைப் பெறுவதன் மூலம் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படும் என்றார். எவ்வாறாயினும், எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டார்.

## மாணவர்களை உள்ளீர்க்க புதிய பொறிமுறை

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்த யோசனைக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், 06ஆம் தரத்துக்கு மாணவர்களை உள்ளீர்ப்பது புதிய பொறிமுறைக்குள் உள்வாங்கப்பட்டாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தரம் 01 முதல் 05 வரையான வகுப்புகளில் காணப்படும் அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் மற்றும் தரம் 07 முதல் 11 வரையான வகுப்புகளுக்கு அதிகபட்சம் 45 மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்படாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள சுற்றுநிருபம் ஏற்பாடுகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தி இடைத்தரங்களில் பாடசாலையை மாற்றுவதற்கு உண்மையான தேவையுடையவர்களை அடையாளங்கண்டு, அனைத்து மாணவர்களுக்கும் நியாயமானதும் சமமானதுமான வாய்ப்புகள் கிடைக்கும் வகையிலேயே புதிய பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுநீரக தரகருக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களை ஏமாற்றி, பெருந்தொகையில் பணத்தை தருவதாகக் கூறி, முன்னணி வைத்தியசாலைகளில் சிறுநீரகங்களை பெற்று, பணத்தை கொடுக்காமல் ஏமாற்றியுள்ளார்.

இதுதொடர்பில் பெண்ணொருவர் உட்பட நால்வர் பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த முறைப்பாட்டை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைக்கு உட்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் இந்த மோசடி வர்த்தகத்துக்கு தரகராக செயற்பட்டவர் என்ற சந்தேகத்தில் டிசெம்பர் 6ஆம் திகதியன்று ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சிறுநீரகத்தை கொடுக்கும் நபருக்கும் வாங்கும் தரப்பினருக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி தரகராக செயற்பட்டுள்ளார். அவர் தரகு பணம் மட்டுமன்றி, சிறுநீரகத்தை கொடுக்கும் நபருக்கு வழங்கவேண்டிய பணத்தில், ஒரு பகுதியை மோசடி செய்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

## குறைக்க முடியாது

மண்ணெண்ணெய் 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது. அதற்கமைய, ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் புதிய விலை 405 ரூபாவாகவும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் புதிய விலை 355 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இந்தச் சூழ்நிலையில் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கும் போது 100 ரூபாயால் அதிகரித்துவிட்டு, விலைகளை குறைக்கும் போது 10 ரூபாயால் குறைத்தால் எம்மால் எவ்வாறு பஸ் கட்டணங்களை குறைக்க முடியும்? ஆகவே, இந்த விலை குறைப்பை 50 சதவீதத்தால் குறைத்தால் எம்மாலும் கட்டணங்களை குறைக்க முடியும் என்றார்.

எவ்வாறு இருப்பினும் இரண்டு, மூன்று நாள்களில் எமது நிலைப்பாட்டை நாம் தெரிவிப்போம் என்றார்.

## யாழ். உறுப்பினர்களை அழைத்தார் ஆளுநர்

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரினால் கடந்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் சபை உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டது. அதனை திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்காது 31ஆம் திகதி நள்ளிரவுடன் மாநகர சபை மேயர் வி. மணிவண்ணன் தனது பதவியை இராஜினாமா செய்துகொண்டார்.

புதிய மேயருக்கான தெரிவு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடத்தமுடியாத நிலைமை காணப்படுவதாகவும், அது தொடர்பில் ஆலோசனைகளை பெற சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையிலேயே யாழ். மாநகர சபை உறுப்பினர்களை தனித்தனி கட்சி ரீதியாக சந்திப்பதற்கு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

## வளங்களை சுரண்டிக்கொண்டு மாவீரன் பறந்துவிட்டார்

நாட்டில் மூளைசாலிகள் வெளியேற்றம் மிக வேகமாக அதிகரித்துள்ளதாகவும், நாட்டை விட்டு வெளியேறத்தயாராக இருக்கும் புத்திஜீவிகளை நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்த அவர், தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க இருளில் இருந்து வெளிப்படும் வெளிச்சக் கோடு போன்று 220 இலட்சம் மக்களின் கூட்டு மனப்பான்மை முக்கியமானது என்றார்.

பிரபஞ்சம் வேலைதிட்டத்தின் கீழ், முல்லேரியாவ, ஹிம்புட்டான பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர வித்தியாலயத்துக்கு பாடசாலை பஸ்ஸொன்றை செவ்வாய்க்கிழமை (03) கையளித்த சஜித் பிரேமதாஸ, அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் கல்வித்துறையை வலுப்படுத்துவதே பிரபஞ்சம் வேலைதிட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எந்தவொரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் இது ஓர் அம்சமாக இருந்தாலும், உலக சவால்களுக்கு ஈடுகொடுக்க முடியாத காலத்திற்கு பொருந்தாத,பின்தங்கிய கல்வி முறையே நம் நாட்டில் நடைமுறையில் உள்ளதாகவும்,

> உலக சவால்களுக்கு ஈடுகொடுக்க முடியாத காலத்திற்கு பொருந்தாத ,பின்தங்கிய கல்வி முறையே நம் நாட்டில் நடைமுறையில் உள்ளமையானது மிகவும் துரதிர்ஷ்ட நிலையாகும்

இது துரதிர்ஷ்ட நிலையாகும் என்றார்.

ஒருபுறம்,கொரோனா வைரஸால் நாடு ஸ்தம்பிதமான நிலையில்,ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் மோசடியால் நாடு மேலும் வங்குரோத்தானது எனவும், அத்தகைய வங்குரோத்து நாடு #Sri Lanka First என்ற தொலைநோக்கின் ஊடாகவே முன்னேற முடியும் என்றார்.

நாட்டின் கல்விக்காக நிதி ஒதுக்க அரசாங்கத்தாலும் கல்வி அமைச்சராலும் முடியாத நிலை ஏற்பட்டாலும், எதிர்க்கட்சியில் இருக்கும் எமக்கு அதற்கான திறமை இருப்பதாகவும், அரச அதிகாரம் இல்லாமல் 2,742 இலட்சம் செலவில் 57 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதுபோன்ற திட்டங்களை செயற்படுத்தும் போது, இதுபோன்ற திட்டங்களை செயற்படுத்த முடியாத குழுக்கள் தரக்குறைவாக விமர்சிப்பதாகவும் தெரிவித்தார்.

## கோட்டா மீண்டும் நாடு திரும்புவார்?

மக்களின் எதிர்ப்பு போராட்டம் காரணமாக கடந்த ஜூலை மாதம் தனது பதவியை இராஜினாமா செய்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது குடும்ப உறுப்பினர்களுடன் 2022 டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி அமெரிக்காவுக்குச் சென்றதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும், கோட்டாபய ராஜபக்ஷ, தனது குடும்பத்தினருடன் முதலில் டுபாய்க்குச் சென்று, அதன் பின்னர் அமெரிக்காவுக்குச் செல்லவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், டுவிட்டரில் பதிவொன்றை இட்டுள்ள 'Asian Tribune' பத்திரிகையின் ஆசிரியர் கே.டி. ராஜசிங்கம், கோட்டாபய ராஜபக்ஷ டுபாயில் சில நாள்கள் தங்கியிருந்து அதன் பின்னர் வேறு ஐரோப்பிய நாட்டிற்கு செல்லவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவர் ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்ல திட்டமிட்டுள்ளதாக பல்வேறு தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும், அவர் இப்போதும் டுபாயில் வசித்து வருவதுடன், முன்னாள் ஜனாதிபதி விரைவில் இலங்கைக்கு திரும்பவுள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரத்தில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

## ஒரு சில துறைகளின் ஓய்வு வயது நீடிக்கும்

ரயில்வே திணைக்களத்தில் இருந்து 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஓய்வு பெற்றதன் காரணமாக 1ஆம் திகதியிலிருந்து 3ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 100க்கும் அதிகமான ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், 44 புதிய ரயில் நிலைய அதிபர்களுக்கான நியமனக்கடிதங்கள் போக்குவரத்து அமைச்சில் வைத்து செவ்வாய்க்கிழமை (03) கையளிக்கப்பட்டன.

எனினும், ஏற்கெனவே ஊழியர் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள ரயில்வே திணைக்களம் திடீரென ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 வருடங்களாகக் குறைத்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இருந்து வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்திய ஆலோசகர்களை உள்ளடக்குவதை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

176 விசேட வைத்திய ஆலோசகர்களால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை பரிசீலித்த பின்னரே ஜனவரி 25ஆம் திகதிவரை இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## வரும் முட்டையால் ஆபத்துகளும் வரும்

வெளிநாடுகளில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதால் நாட்டுக்கு பறவைக் காய்ச்சல் அபாயம் ஏற்படக்கூடும் என்று அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்க தலைவர் சிசிர பியசிறி எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், இறக்குமதி தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

விடயதானத்துடன் தொடர்புடைய துறையினரால் பறவைக் காய்ச்சலை தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் பிரயத்தனங்கள் மேற்குறிப்பிட்ட தீர்மானத்தால் பாதாளத்துக்கு செல்லும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, முட்டையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், முட்டை உற்பத்தியாளர்கள் வாழ்வாதாரத்தை இழக்க நேரிடும் என்றும் அந்தத் தீர்மானத்தை மீள்பரிசீலிக்குமாறும் அகில இலங்கை கோழி விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## அமைச்சரை மாற்ற வேண்டும்

அமைச்சரொருவரை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்தது.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக்குழு மற்றும் சட்டத்தை மீறி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட மின் கட்டண உயர்வு யோசனை, மின்சாரசபை தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்களின் எதிர்ப்பால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார். யோசனை ஒத்திவைக்கப்பட்டுள்ள காரணத்தால் தாம் எதிர்ப்பு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அதனை மீண்டும் அமல்படுத்த முயன்றால் போராட்டங்கள் நடத்தப்படும் என்றார்.

சட்டங்களை மீறி மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத கட்டண அதிகரிப்பு முறைமையை முன்வைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடையவர் காத்தான்குடியில் கைது

தொடர்புகளை பேணிவந்துள்ளதாக இந்திய உளவுத்துறை விசாரணையின் தெரியவந்ததை அடுத்து இலங்கை உளவுத்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் காத்தான்குடியிலுள்ள அவரது வீட்டில் வைத்து விசாரணைக்காக பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# வீம்பு பேச்சில் நாட்டை கட்டியெழுப்ப முடியாது




வீம்பு பேச்சு பேசி நாட்டை கட்டியெழுப்ப முடியாது எனவும்,சரியான குழுவுடனும் சரியான தொலைநோக்குடன் நாட்டை கட்டியெழுப்புவதே மேற்கொள்ள வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பேருந்தை ஒட்டுகிறாரா, இல்லையா, என்பதை பார்த்து விமர்சிப்பதை விட,இந்த நடவடிக்கை பயனுள்ளதா? இல்லையா? என்பதை ஆராய்வது உகந்தது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,நாட்டின் கல்விக்கட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு என்ன விமர்சனம் வந்தாலும் முன்னெடுக்கும் பணிகள் நிறுத்தப்படாது என்றார்.


பிரபஞ்சம்'வேலைத்திட்டத்தின் கீழ் 56 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம்(5,000,000) ரூபாய் பெறுமதியான பாடசாலை பேருந்து வண்டியொன்று காலி உடுகம தேசியப் பாடசாலைக்கு திங்கட்கிழமை (02) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் ஏறக்குறைய சகல அபிவிருத்தியடைந்த நாடுகளும் நவீன கல்வி முறைகளை பரிசோதித்து வருவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,கல்வியில் புதிய பாய்ச்சலின் ஊடாக ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றார்.

பழைய போர்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு மத்தியில் இருந்த ருவண்டா நாடு தற்போது ஆப்பிரிக்காவின் சிங்கப்பூராக மாறியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,கல்வியில் புதிய போக்குகள் மூலம் முன்னேறிய நாடுகள் பல உள்ளன என்றும் நினைவூட்டினார்.

## கோட்டாவுக்கு தெரியாது ரணிலுக்கு தெரியும்



சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்குள் கொண்டுவருவது குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தெரியாது. ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுற்றுலாப் பயணிகளின் பெறுமதியை அறிந்தவர் என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையத்தில் நேற்று முன்தினம் வந்திறங்கிய ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை வரவேற்க சென்றிருந்த போதே அவர் இதனை கூறியுள்ளார். சிகப்பு பிடியாணை பிறப்பித்து உதயங்கவை தடுத்து நிறுத்த முடியாது. மத்தள விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளேன். அதிகளவான சுற்றுலாப் பயணிகளை மத்தள விமான நிலையம் ஊடாக வரவழைத்து மத்தள விமான நிலையத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுப்பேன். இதற்கு அதிகாரிகளின் உதவியும் எமக்கு தேவை. கடந்த முறை ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் மத்தள விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்கு வந்த போது, அவர்கள் விமான நிலையத்தில் இருந்து வெளியில் வர 4 மணி நேரம் ஆனாது. சுற்றுலாப் பயணிகள் விமான நிலையத்தில் இறங்கியதும், அவர்களுக்கு உதவிகளை வழங்கி துரிதமாக விமான நிலையத்திற்கு வெளியில் அனுப்பி வைக்க வேண்டும். கால தாமதம் ஆகும் போது சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டின் மீது வெறுப்பு ஏற்படும் எனவும் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

**“ நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில், ஆரோக்கியமான விதத்தில் நாட்டின் வருவாயை அதிகரிக்கும் வேலைத்திட்டங்களை நான் முன்னெடுத்து வருகின்றேன்**

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில், ஆரோக்கியமான விதத்தில் நாட்டின் வருவாயை அதிகரிக்கும் வேலைத்திட்டங்களை நான் முன்னெடுத்து வருகின்றேன். இந்த ஆண்டில், அதிகளவான சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்குள் கொண்டுவந்து சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.




## புத்தளத்தில் இன்று டெங்கொழிப்பு

■ *எம்.யூ.எம்.சனூன்*

நாட்டில் தொடர்ந்து பெய்து வந்த மழை காரணமாக புத்தளம் பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் பரவிவருகின்றது. வைத்தியசாலையில் அதிகமான நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

புத்தளம் பெரிய பள்ளி, நகர சபை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், ஜம்இய்யத்துல் உலமா கிளையினர் மற்றும் முப்படையினர் உள்ளிட்டோர் டெங்கு நுளம்பு பெருகுவதை கட்டுப்படுத்தும் நோக்குடன் பாரிய சிரமதான வேலைத்திட்டத்தை இன்று (04) முன்னெடுக்கவுள்ளனர்.

சிரமதானத்தை மேற்கொண்டு சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைக்குமாறும், தங்கள் வீடுகளிலுள்ள டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை சுத்தம் செய்யுமாறும், பரிசோதிப்பதற்காக வருகைதரும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பிரிவினருக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.



## ஊடகவியலாளர்களுக்கு கௌரவம்

■ *ரீ.எல் ஜவ்பர்கான்*



பொருளாதார நெருக்கடியிலும், மக்களுக்கு அர்ப்பணிப்புடன் ஊடகப் பணியாற்றிவரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் 22 பேர், சரீரம் நிஷப்தபதி ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மன்றத்தின் தலைவர் கலாநிதி ஆ.லோகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ‘தமிழ்மிரர்’ செய்தியாளர்களான எல். தேவஅதிரன், ரீ.எல் ஜவ்பர்கான், எம்.எஸ்.எம் நூர்தீன், வ. சக்திவேல், க. சரவணன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.



சிறைச்சாலைகள்

## புள்ளிவிவர அறிக்கை கையளிப்பு

2022 ஆம் ஆண்டு இலங்கை சிறைச்சாலைகளில் பணியாற்றிய அனைத்து அதிகாரிகள் மற்றும் கைதிகள் உட்பட சிறைச்சாலை அமைப்பு பற்றிய அனைத்து தகவல்களும் உள்ளடங்கிய புள்ளி விவர அறிக்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவினால் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் திரு. ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

## உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பம்



பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கான wdisastermin.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனினால் கொழும்பிலுள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் (ஜன. 02) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமைச்சுக்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சர் இந்த இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்ததுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC), வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) ஆகியவற்றின் அதிகாரிகளுடன் சுமுகமாக கலந்துரையாடினார். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே. கருணாநாயக்க, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆசிரி கருணாவர்தன, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பாதுகாப்பு) ஹர்ஷ விதானாரச்சி மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**“ அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC), வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) ஆகியவற்றின் அதிகாரிகளுடன் சுமுகமாக கலந்துரையாடினார்**

பிறக்கவிருக்கும் குழந்தைக்கு பொருட்கள் வாங்கிய

## கர்ப்பிணிக்கு பிணை

பிறக்கவிருக்கும் தனது பிள்ளைக்குத் தேவையான பொருட்களை வாங்கிய கர்ப்பிணி பிணையில் விடுதலைச் செய்யப்பட்டுள்ளார். திருணம் வைபவமொன்றுக்கு அணிந்து சென்று கொண்டு வந்து தருகின்றேன் என அந்த கர்ப்பிணி, பக்கத்து வீட்டில் இருக்கும் பெண்ணிடம் சுமார் ஒன்றரை இலட்சம் பெறுமதியான தங்க சங்கிலியை இரவல் வாங்கியுள்ளார்.

அந்த தங்க சங்கிலியை அடகுவைத்து தனக்கு பிறக்கவிருக்கும் குழந்தைக்குத் தேவையான பொருட்களை அந்தப் பெண் கொள்வனவு செய்துள்ளார். கொழும்பு கரையோர பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், இரவல் வாங்கிய பெண்ணை, கொழும்பு பதில் நீதவான், இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

“பிறக்கவிருக்கும் குழந்தைக்குத் தேவையான பொருட்களை வாங்கிவருமாறு பட்டியல் கொடுக்கப்பட்டது. அதிலிருந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான பணம் இல்லை. ஆகையால், அடகுவைத்து, பொருட்களை கொள்வனவு செய்துவிட்டேன்” என்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருமண வைபவத்துக்கு அணிந்து சென்று, திரும்பி வந்ததும் தருவேன் எனக்கூறி, இரவல் வாங்கிச் சென்ற தங்க மாலையை குறிப்பிட்ட நாளில் திரும்பி தரவில்லை. கேட்டதற்கு அடகுவைத்து பிறக்கவிருக்கும் குழந்தைக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்துவிட்டேன் என கூறுகிறார். என தங்கசங்கிலியை இரவல் கொடுத்த பெண், முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேகநபரை தேடிச் சென்று கைது செய்வதற்கு முயன்றபோது. பிரசவத்துக்கு நாள் நெருங்கி இருந்தமையால், அப்பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்து விட்டதாகவும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு பொலிஸார் கொண்டுவந்தனர்.

அதனடிப்படையில், பொரளை சீமாட்டி வைத்தியசாலைக்கு கண்காணிப்பு விஜயம் செய்த பதில் நீதவான், சந்தேகநபரான அந்தப் பெண்ணை அடையாளம் கண்டு, அப்பெண்ணை சரீர பிணையில் விடுதலைச் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளார்.



## நாளை சபை கூடும்

இந்த வருடத்தின் முதலாவது பாராளுமன்றக் கூட்டம் நாளை (05) வியாழக்கிழமை நடைபெறும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு பணியக சட்டமூலம் மற்றும் குத்தகைக்கு விடப்பட்ட வளாகங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் நடைபெறவுள்ளது. அந்த கூட்டத்தில், வாய்மொழி பதில் தேவைப்படும் கேள்விகளுக்கு காலை 9:30 மணி முதல் 10:30 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டு, அன்று மதியம்அரசாங்கம் கொண்டு வந்த பிரேரணையின்படி ஒத்திவைப்பு விவாதமும் நடத்தப்படும்.

## நாட்டை மீண்டும் அழிக்க இடமளிக்கப் போவதில்லை



வீழ்ச்சி கண்ட நாட்டை ஜனாதிபதி மீட்டெடுக்க சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவரும் அதே வேளையில், ஒருவரது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக நாட்டை மீண்டும் அழிக்க இடமளிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்திருந்தார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (3) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். எதிர்க்கட்சிகள் கூறுவது போல் பெரும் தொகையை வார்த்து இந்த தருணத்தில் வாக்கெடுப்பு நடத்தினால் மக்கள் வாணலியில் விழுவார்கள் என்றும் வஜிர அபேவர்தன தெரிவித்திருந்தார். நாட்டின் இளைஞர்கள் கோரிய முறைமை மாற்றத்தை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்த போதிலும், எதிர்க்கட்சிகள் அதற்கு வெளியில் சென்று பழைய வேலைத்திட்டத்தில் செயற்படுவதாக வஜிர அபிவர்தன தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் கோரிய தகவலை வழங்க வேண்டும்

## தவறின் வழக்குத் தாக்கல் செய்யப்படும்

மு. தமிழ்ச்செல்வன்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர் கோரிய தகவலை இம்மாதம் 25 ஆம் திகதிக்குள் வழங்கவேண்டும். தவறின் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என, இலங்கை தகவல் அறியும் ஆணைக்குழு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சியை சேர்ந்த ஊடகவியலாளர் மு. தமிழ்ச்செல்வன், 2022 மார்ச் மாதம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வருகின்ற மாகாண விசேட பெண் நோயியல் மருத்துவமனை தொடர்பில் தகவல்களை கோரியிருந்தார்.

ஆனால், குறித்த தகவல்களை வழங்குவதை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தவிர்த்திருந்தது. எனவே, இது தொடர்பில் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு ஊடகவியலாளரால் 29.03.2022 அன்று முறையீடு செய்யப்பட்டிருந்தது. எனவே, அதற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் 30.06.2022 அன்று ஊடகவியலாளரால் முறையீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு அமைய நேற்று (03) குறித்த விடயம் தொடர்பில் 'சூம்' வழியில் தகவல் அறியும் ஆணைக்குழு விசாரணையை மேற்கொண்டது.

இதன் போது, குறித்த தகவல்கள் எதுவும் தங்களிடம் இல்லை என்றும் விசேட வெளிநாட்டு நிதி ஒதுக்கீடு மூலம் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் ஆகவே இதன் தகவல்கள் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் அல்லது மத்திய சுகாதார அமைச்சிடம்தான் உள்ளன என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந. சரவணபவன் தகவல் அறியும் ஆணைக்குழுவின் முன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆணைக்குழு, சட்டத்தின் பிரகாரம் ஊடகவியலாளர் கோரிய தகவல்களை ஜனவரி 25ஆம் திகதிக்குள் உரிய இடத்தில் பெற்று வழங்குவதோடு, தமக்கும் பிரதியிட வேண்டும் என உத்தரவிட்டதோடு, தவறின் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் எச்சரித்தது.



### கொல்லப்படவிருந்த பசுக்களை

# காப்பாற்றிய பொலிஸார்

எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துன்னாலை, குடவத்தை பகுதியில் இறைச்சிக்காக வெட்டுவதற்கு வைத்திருந்த நான்கு பசு மாடுகளை பருத்தித்துறை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான குழுவினரே குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டு, நான்கு பசு மாடுகளையும் காப்பாற்றியுள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த பருத்தித்துறை பொலிஸார், கடந்த நாள்களில் தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், குறித்த பசுக்களின் உரிமையாளர்கள், உரிய ஆதாரத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# வீட்டுக்குள் புகுந்த திருடனுக்கு முறையான கவனிப்பு

செந்தூரன் பிரதீபன்

அச்சுவேலி வடக்கு, கந்தசுவாமி ஆலய தெற்கு வீதியில் உள்ள வீட்டுக்குள் திருட முற்பட்ட நபர், பிடிபட்டு நையப்புடைக்கப்பட்டார். இந்த சம்பவம் நேற்று (03) இரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு திருடர்கள் பின்பக்க வாசலூடாக வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். இதனை அவதானித்த பெண், குறித்த நபரைப் பிடித்துள்ளார்.

பின்னர் வீட்டில் இருந்தவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, திருடனை முறையாகக் கவனித்தனர். அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, திருட்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

### கிளிநொச்சி, முல்லைத்தீவில்

# முக்கிய குளங்கள் வான் பாயவில்லை

நடராசா கிருஸ்ணகுமார்

குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்து காணப்படும் நிலையில், தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறாவிட்டால், எதிர்வரும் சிறுபோகம் பாதிக்கப்படும் என விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது பெரிய குளமாகிய இரணைமடுக் குளத்தின் முழுமையான நீர் மட்டம் 36 அடியாக காணப்படுகின்றபோது, தற்போது 27 அடி நீர் மட்டம் காணப்படுகின்றது. நெற்பயிர்ச் செய்கைக்கு நீர்ப்பாசனம் நடைபெறும் நிலையில், குளத்துக்கான நீர்வரவு அவசியமாகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முக்கியமான குளமான வவுனிக்குளத்தின் முழுமையான நீர் மட்டம் 26 அடியாகும். தற்போது 16 அடி நீர் மட்டமே காணப்படுகிறது.

வழமையாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இக்காலங்களில் ஐந்து தடவைகளுக்கு மேல் குளங்கள் வான் பாய்கின்ற நிலைமை காணப்படுகின்ற போதிலும், குளங்களுக்கு இவ்வாண்டு நீர் வரவு குறைவு காரணமாக, முக்கிய குளங்கள் வான் பாயாமல் உள்ளன.



### வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளராக

# பொறுப்பேற்பு

நடராசா கிருஸ்ணகுமார்

வடமாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக நவரத்தினம் சுதாகரன், திங்கட்கிழமை (02) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக பணியாற்றிய காலத்தில், போர் காலத்தில் சேதமடைந்த கல்மடுக் குளத்தைப் புனரமைப்பதில் முக்கிய பங்காற்றியிருந்தார். இரணைமடுக் குளம், அக்கராயன் குளம், முத்தையன்கட்டு, வவுனிக்குளம் உட்பட பல குளங்களை அபிவிருத்தி செய்வதில் முன்னின்று வேலைத் திட்டங்களை செயற்படுத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### உடையார்கட்டில்

# ஏ.ரி.எம் இயந்திரத்தை சேதப்படுத்திய விசமிகள்

செ. கீதாஞ்சன்



புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி ஏ.ரி. எம் இயந்திரத்தின் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியமை தொடர்பில், வங்கி முகாமையாளரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (02) இரவு புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் உள்ள உடையார்கட்டு சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள ஏ.ரி. எம் இயந்திரத்தின் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியமை தொடர்பில், புதுக்குடியிருப்பு இலங்கை வங்கியின் முகாமையாளரால், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# நாய்கள் குதறிய நிலையில் சிசுவின் சடலம் மீட்பு

நிதர்சன் வினோத்

வடமராட்சி கிழக்கு வத்திராயனில் பச்சிளம் குழந்தையின் சடலம், நாய்கள் குதறிய நிலையில் வீதியோரமாக மீட்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (02) மாலை மருதங்கேணி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பச்சிளம் குழந்தையின் சடலம் மீட்கப்பட்டதுடன், இது தொடர்பாக விசாரணைகளை முடுக்கிவிட்ட மருதங்கேணி பொலிஸார், சந்தேகத்தின் அடிப்படையில் அப்பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த 34 வயதுடைய பெண்ணை கைது செய்துள்ளனர்.

### இந்தியாவின் துணையோடு

# அரசியல் நகர்வை முன்னெடுக்கவுள்ளோம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ்

கே.எல்.ரி யுதாஜித்

எமது மக்களின் விடிவுக்கான வழி, இந்தியாவின் கைகளில் தங்கியிருக்கின்றது. போராளிகளாகிய எங்களை, இந்தியா தற்போது அங்கிகரிக்கும் நடைமுறைகளைக் கையாண்டு வருகின்றது. எனவே, இந்தியாவின் துணையோடு, தமிழ் மக்களுக்கான அரசியல் நகர்வை, நாங்கள் முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ் தெரிவித்துள்ளார்.

வாகரைப் பிரதேசத்தில், கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பும் இணைப்பாளர்கள், இளைஞர் அணி உருவாக்கம் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வாகரைப் பிரதேச இணைப்பாளர்களான யு.சதீஸ், க.லதாகரன் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மட்டு - அம்பாறை நிர்வாகப் பொறுப்பாளர் தீபன், மட்டக்களப்பு இணைப்பாளர் சுதாகர், முன்னாள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது, கட்சியின் இளைஞர் அணிக்கான வாகரைப் பிரதேச பொறுப்பாளராக சி. துனேஸ்காந் நியமிக்கப்பட்டார்.



கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ் மேலும் தெரிவித்ததாவது; ஈழத் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவென, ஆயுதமேந்திப் போராடிய போராளிகள், ஆயுதம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், எமது போராட்ட வடிவத்தை மாற்றி, ஜனநாயக நீரோட்டத்தில், அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கான நம்பகமான நடைமுறைகளை முன்னெடுக்கப் புறப்பட்டுள்ளோம். போராட்ட காலத்தில் தமிழ் மக்களின் ஆதரவு போராளிகளுக்கு எவ்வாறு இருந்ததோ, அதேவிதத்தில் தற்போதைய அரசியல் போராட்டத்திலும் எமக்கு மக்களின் ஆதரவுத் தளம் அமைய வேண்டும்.

இந்த நாட்டின் அரசாங்கங்கள், தமிழர்களின் உரிமையை வழங்க மறுத்ததன் காரணமாகவே, போராட்ட வடிவங்கள் உக்கிரமடைந்தன. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் மனதில் உள்ள உரிமைக் கோரிக்கையும் போராட்ட குணமும் இன்னும் குறையவில்லை என்றார்.



# இருதயபுர முதியோர்களின் ஒன்றுகூடல்

எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு முதியோர்களின் ஒன்றுகூடலும் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் இருதயபுரம் மேற்கு முதியோர் சங்க தலைவர் பி. கிருஸ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்துக்கு பிரதம அதிதியாக மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் ஷியாஹுல் ஹக், விசேட அதிதியாக டொக்டர் எஸ். கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இச்சங்கத்தின் செயலாளர் என். ஜெகநாதன், பொருளாளர் எஸ். டானியல் குணநாதன், இருதயபுர கிராமசேவை உத்தியோகத்தர் சுகந்தி ஜெகதர்ஷன், சமூக சேவை உத்தியோகத்தர் பி. ராஜ்மோகன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயதர்சன் எனப் பலர் கலந்து கொண்டனர்.




### பெரும்போக நெல்லை உத்தரவாத விலையில்

# கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை

ஹஸ்பர்

பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட இருக்கின்ற நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிண்ணியா விவசாய சம்மேளனங்களின் ஊடகப் பேச்சாளர் எம். எம் மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.


உர இறக்குமதி நிறுத்தப்பட்டமையாலும் நெற்செய்கைக்கான மூலப்பொருட்களின் விலை உயர்வாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வருமான இழப்பு, கடன் போன்றவற்றால் தத்தளிக்கின்றனர்.

எனவே, இன்னும் சில நாள்களில் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பெரும்போக அறுவடை நெல்லை, அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் சார்பாக அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

### காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில்

# நூற்றுக்கு நூறு வீதம் சுகப்பிரசவம்

ரீ.எல் ஜவ்பர்கான்



மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலைகளில் ஒன்றான காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில், நூற்றுக்கு நூறு வீதம் சுகப்பிரசவம் இடம்பெற்றிருப்தாக வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம் ஜாபீர் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு குறித்த வைத்தியசாலையில் 510 பிரசவங்கள் இடம் பெற்றதாகவும் இதில் 508 சுகப்பிரசவங்கள் எனவும் இரண்டு சிசுக்கள் இறந்து பிறந்ததாகவும் தெரிவித்தார்.

### காத்தான்குடி மத்திய கல்லூரி:

# புதிய அதிபர் கடமை பொறுப்பேற்பு

எம்.எஸ்.எம் நூர்தீன்



காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றிய எம். எசி.எம்.ஏ சத்தாரின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் வைபவமும், புதிய அதிபர் எம்.ஏ நிஹால் பதவியேற்கும் நிகழ்வும் கல்லூரி மண்டபத்தில், கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பு மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (31) நடைபெற்றன.

நிகழ்வில், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ். எச் அஸ்பர், பழைய மாணவர் அமைப்பின் பிரதி தலைவர் பொறியியலாளர் பலுல் ஹக், செயலாளர் றிபாய் கலீல் உட்பட பிரமுகர்கள பலரும் கலந்து கொண்டனர்.

### மாகாண சுகாதார அமைச்சில்

# தகவல் தொழில்நுட்ப பிரிவு திறந்து வைப்பு

அபு அலா

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப நாம் அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளவும், தகவல்களையும் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்புகள் அதிகமுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (03) அமைச்சின் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து விடயங்களையும் திட்டமிடல், ஒருங்கிணைத்தல், செயற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்கலாம் என்றார்.

இந்நிகழ்வில், அமைச்சின் கணக்காளர் எஸ். சட்குணேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஶ்ரீவாணி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி எஸ்.விஜயகுமார் உட்பட அமைச்சின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

வீதியைப் புனரமைக்காமல்

# “ஊருக்குள் வரவேண்டாம்”

## அரசியல்வாதிகளுக்கு வெளிஓயா மக்கள் எச்சரிக்கை

எஸ்.கணேசன்

விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, எமக்கான வீதியை புனரமைத்து தராமல், அரசியல் வாதிகள் எவரும் ஊர் பக்கம் வரக்கூடாது. அவ்வாறு வந்தால் அடித்து விரட்டுவோம் என ஹட்டன்- வெளிஓயா தோட்ட மக்கள் எச்சரித்துள்ளதுடன் செவ்வாய்க்கிழமை (3) ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

குறித்த தோட்டத்தைச் சேர்ந்த 4 வயது சிறுவன் ஒருவன் சுகவீனமுற்றிருந்த நிலையில், உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகனம் கிடைக்காமை காரணமாக திங்கட்கிழமை(2) உயிரிழந்துள்ளார்.

அத்துடன், வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் வெளியில் இருந்துகூட வாகனத்தை பெற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இனிமேலும் உயிர்கள் காவு கொள்ளப்படுவதற்கு இடமளிக்க முடியாது எனவும், வீதியை உடன் புனரமைத்து தருமாறு வலியுறுத்தியும்



தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 2 கிலோ மீற்றர் வரையான வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் மழைக்காலங்களில் பாடசாலை மாணவர்கள், உயிரை கையில் பிடித்துக்கொண்டே பயணிப்பதாகவும், இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

சிறுவனின் மரணத்துக்கு இந்த வீதியும் ஒரு காரணம் என தெரிவித்த மக்கள், இனியும் மக்களை பலிகொடுக்க நாம் தயாரில்லை. எமக்கான வீதி



புனரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசியல்வாதிகளை தோட்டத்துக்குள் விட மாட்டோம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

கொட்டகலையில் 280 குடும்பங்களுக்கு

# உலர் உணவுப்பொருள்கள் இன்று வழங்கப்படவுள்ளன



எஸ்.கணேசன்

கொட்டகலை பிரதேச சபை நிர்வாக எல்லையில் மந்த போசனை நிறைந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ள 280 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொட்டகலை பிரதேச சபைத் தவிசாளர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

இந்த உலர் உணவுப் பொதிகளை இன்று (4) தொடக்கம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

திங்கட்கிழமை (02) நடைபெற்ற பிரதேச சபையின் முதலாவது அமர்வில் கலந்து கொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மத்திய மாகாணத்தில் மந்த போசனையால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இனங்காணப்பட்டு, தேசிய மட்டத்திலான சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட உள்ளன.

அந்த வகையில் கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 1 - 5 வயது வரையுள்ள மந்த போசனையால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் சிபாரிசுக்கு அமைவாக 280 குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளன. சுமார் 12 இலட்சம் ரூபாய் செலவில் அவர்களுக்கான பொதிகள் இன்று (4) கொட்டகலை ரிஷிகேஷ் மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு மேலும் உதவும் வகையில் எதிர்காலத்தில் அரச சார்பற்ற நிறுவங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தொழில் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்

மாத்தளை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனை இலவச நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த திட்டம், மாத்தளை மகாத்மாகாந்தி நிலையத்தில் வியாழக்கிழமை (5) காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வானது Eventorg என்ற தனியார் நிறுவனத்துடன், மாத்தளை Rotary கழகம், கொழும்பு Janatha steel நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளது. இதில் பல்வேறுபட்ட துறைசார் நிபுணர்கள் வளவாளர்களாக கலந்துகொள்ள உள்ளனர்.

காசல்ரீ ஓயாவில் இருந்து

# மகாலிங்கத்தின் சடலம் மீட்பு

ரஞ்சித் ராஜபக்ஷ, எம். கிருஸ்ணா

வீட்டில் இருந்து காணாமல் போன மூன்று பிள்ளைகளின் தந்தையின் சடலம் காசல்ரீ ஓயாவில் இருந்து மீட்கப்பட்டதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒஸ்பன் தோட்டத்தில் வசிக்கும் பொன்னுசாமி மகாலிங்கம் (வயது 73) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் வீட்டில் இருந்து காணாமல் போயிருந்தார் என அவரது உறவினர்கள் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்

இந்த நிலையில், தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள், ஆற்றில் சடலம் மிதப்பதை அவதானித்து, பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சடலத்தை ஹட்டன் மாவட்ட நீதிமன்ற நீதவான் பார்வையிட்டதன் பின்னர் டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீதியின் இரு புறங்களிலும் முன்னெடுக்கப்பட்ட

# மாணிக்கக்கல் அகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டது



சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி- கொடவெல வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக்கல் அகழப்படும் நடவடிக்கை, சப்ரகமுவ மாகாண ஆளுநரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது

இந்த செயற்பாட்டை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ இரத்தினக்கல்அதிகார சபையின் தலைவர் விராஜ் சில்வாவுக்கு தொலைபேசி ஊடாக திங்கட்கிழமை (02) பணித்தார்.

குறித்த வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக்கல் அகழப்படுவதால் வீதிக்கு பாரிய சேதம் ஏற்பட்டு வருவதை கருத்திற்கொண்டே மாகாண ஆளுநர் இவ்வாறு பணித்துள்ளார். இந்த வீதி 11 கோடி ரூபாய் செலவில் வீதி அபிவிருத்தி

**“ தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மற்றும் இரண்டு பொறியிலாளர்கள் உள்ளடக்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது**

அதிகார சபையினால் கடந்த 18 மாதங்களுக்கு முன்பு புனரமைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், வீதியின் இரு புறங்களிலும் பெகோ இயந்திரம் மூலம் மாணிக்கக்கல் அகழப்பட்டு வருவதால் வீதி சேதமடைந்து தற்போது பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இரத்தினக்கல் அதிகார சபையின் அனுமதியுடன் பெகோ இயந்திரத்தின் மூலம் அகழ்வு முன்னெடுக்கப்படுவதால் சேதமடைந்த வீதியை தமது சொந்த நிதியின் மூலம் சீரமைத்து தருவதாக உரிய அனுமதி பத்திரத்தின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மேற்படி வீதியின் அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆணையாளர், இரத்தினபுரி வீதி அபிவிருத்தி அதிகார சபை, இரத்தினபுரி மா நகர சபை, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மற்றும் இரண்டு பொறியிலாளர்கள் உள்ளடக்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சமூக சிற்பிகள் அமைப்பின்

# போதைப் பொருள் விழிப்புணர்வு செயலமர்வு

நிலமேகம் பிரசாந்த்

போதைப்பொருள் பாவனைகளில் இருந்து விடுபடுதல் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு, சாமிமலை- பாரதி தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மலையகத்தில் போதை பொருள் விநியோகமும் பாவனையும் அதிகரித்துள்ளதுடன், மாணவர்களை இழக்கு வைத்தே இப் போதைப்பொருள் விநியோகிக்கப்படுவதால் போதைப்பொருள் பாவனைப் பற்றிய விழிப்புணர்வை பாடசாலை



மாணவர்களிடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டுமென கருதி இத்திட்டம் குறித்த பாடசாலையில் ஒழுங்கமைக்கப்பட்டது.

ஹட்டன் சமூக சிற்பிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் வாளவாளர் சட்டதரணி லலிதாம்பிகை, சமூக சிற்பிகள் அமைப்பின் வேலைத்திட்ட இணைப்பாளர். ஈஸ்வரி, நோர்வூட் பொலிஸ் நிலைய மகளிர் உத்தியோகஸ்தர் மற்றும் சமூக நிறுவனங்களின் பிரநிதி ரஜனிகாந்த் ,மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் சுரேஸ்குமார் ,சர்வோதய நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர் சுமதி, பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஆபத்தான பலகைப் பாலத்தின்

# புனரமைப்பு பணிகள் கைவிடப்பட்டுள்ளன



என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டையிலிருந்து சீபொத் வழியாக அமனாவல பிரதேசத்தில் பிரித்தானியர் ஆட்சி காலத்தில் பலகைகளினால் அமைக்கப்பட்ட பாலமொன்று தற்போது மிகவும் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

குறித்த பாலம் ருவன்வெல்ல பொறியியலாளர் அலுவலகத்தினால் பலகைகள் இடப்பட்டு சீர்செய்யப்பட்டாலும் இதில் வாகனங்கள் பயணிப்பது மிகவும் ஆபத்தானதாக காணப்படுகின்றது.

இந்தப் பாலம் ஊடாக இ.போ.ச. பஸ், தனியார் பஸ்கள் உள்ளிட்ட பல வாகனங்கள் நாளாந்தம் சென்று வரும் நிலையில், பாலம் புனரமைப்பு செய்யப்படாவிட்டால் பாரிய ஆபத்து ஏற்படலாம் என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த நல்லாட்சியில் குறித்த இடத்தில் புதிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், குறித்த பாலம் தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு பலகையொன்றும் ருவன்வெல்ல பொறியியல் அலுவலகத்தினரால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# பூ பனிப் பொழிவால் உற்பத்திகள் பாதிப்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா நகரசபைக்கு உட்பட்ட பல இடங்கள் மற்றும் அம்பேவல, பட்டிபொல ஆகிய பிரதேசங்களில் செவ்வாய்க்கிழமை (3) அதிகாலை பூ பனிப் பொழிந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதத்தில் நுவரெலியாவில் பூ பனிப் பொழியும். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நுவரெலியா நகரிலுள்ள பூங்கா, தேயிலைத் தோட்டங்களில் பூ பனிப் பொழிவு காணப்பட்டது.

செவ்வாய்க்கிழமை (3) அதிகாலை



நுவரெலியாவின் வெப்ப நிலை 5 பாகை செல்சியஸாக காணப்பட்டதால் அதிகம் குளிரான நிலையை மக்கள் எதிர்கொண்டனர்.

இதேவேளை பூ பனிப் பொழிவால் தேயிலை, மரக்கறி மற்றும் மலர் உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# சட்ட வைத்திய நிபுணர் இன்மையால் சிரமம்

சுமணசிறி குணதிலக

மொனராகலை மாவட்டத்தில் சட்ட வைத்திய நிபுணர் இன்மையால் சடலங்களை பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய விசேட சட்ட வைத்திய அதிகாரி வெளிநாடு சென்றுள்ள குறித்த வெற்றிடத்திற்கு 6 மாதங்கள் கடந்தும் இதுவரை விசேட வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. தற்போது ஊவா மாகாணத்தில் உள்ள பதுளை பொது வைத்தியசாலையில் நிபுணத்துவ சட்ட வைத்தியர் மாத்திரமே கடமையாற்றுகின்றார்.

இந்நிலையில் மொனராகலை வைத்தியசாலைகளில் நிகழும் மரணங்கள் நேரங்களில் விசேட வைத்தியரால் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் சடலங்களை பதுளை, பலாங்கொடை மற்றும் அம்பாறை வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

இறந்தவரின் உறவினர்கள் இறந்த உடலை எடுத்துச் செல்ல பெரும் தொகையை செலவழிக்க வேண்டியுள்ளதுடன் சடலத்தைப் பெற உறவினர்கள் பல நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே, மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சட்ட வைத்தியர் நிபுணர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு மாவட்ட மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிறிஸ்டாலினா ஜார்ஜிவாவின் எச்சரிக்கையும் சாதாரண குடிமகனும்

நாால்வர் அடங்கிய சாதாரண குடும்பமொன்றுக்கு மாதமொன்றுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக, 2022 டிசெம்பர் மாதம் செலவழித்த தொகையை விடவும் இன்னுமோர் அரைப் பங்கை 2023 ஜனவரியில் செலுத்தினாலும் கைநிறைய பொருட்களை கொள்வனவு செய்யமுடியாத நிலைக்கே முகங்கொடுப்பதாக குடும்பத்தலைவர்கள் புலம்பத்தொடங்கிவிட்டனர்.

புத்தாண்டு ஆரம்பமாகி நான்கு நாள்கள்கூடக் கடக்கவில்லை. இதற்கிடையில், பொருளாதாரம் கழுத்தை நெரிக்கத்தொடங்கிவிட்டது. முட்டைக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. நாளொன்றுக்கு ஒரு முட்டையை சாப்பிட்டு, உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தை பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், விசேட கூற்றொன்றை விடுத்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டாலினா ஜார்ஜிவா “உலகில் மூன்றில் ஒரு பகுதி நாடுகளில், இந்தாண்டு பொருளாதார மந்தநிலை நிலவும்” என்று எச்சரித்துள்ளார்.

சீனாவில் மீண்டும் அதிகரித்து வரும் கொரோனோ தொற்று, பத்து மாதங்களை கடந்து நீடிக்கும் உக்ரேன்-ரஷ்யா போரால் பணவீக்கம், வட்டிவீதம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், பொருளாதார மந்தநிலை நிலவுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பொருளாதார மந்தநிலை காரணமாக, எத்தியோப்பியா, ஜாம்பியா, கானா, லெபனான், இலங்கை போன்ற நாடுகளில் வாழும் மக்கள், கடன் பிரச்சினைக்கு கடுமையாக முகங்கொடுப்பதாகவும் எனினும், நாடுகளுக்கு அவசர கடன் நிவாரணம் கிடைக்கவேண்டுமென வலியுறுத்துவதாகவும் ஜார்ஜிவா தெரிவித்துள்ளார்.

“இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்” என ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துகளை தெரிவித்துகொண்டு, இன்முகத்துடன் வரவேற்றாலும் இவ்வருடமும் வாட்டி வதைக்கப்போகிறது என்பது மட்டுமே உண்மையாக இருக்கப்போகிறது.

2021ஆம் ஆண்டில் 6 சதவீதமாக இருந்த உலக பொருளாதார வளர்ச்சி, 2022இல் 3.2 சதவீதமாக இருந்தது. இந்தாண்டில் இது 2.7 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உலக நிதி நெருக்கடியால், 2001ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதாவது 21 ஆண்டுகளுக்கு பிறகு பொருளாதார வளர்ச்சி 2.7 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஜார்ஜிவா குறிப்பிட்டுள்ளார்.

உலக பொருளாதார வளர்ச்சியே 2.7 சதவீதமாக இருக்குமென கணிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையின் நிலைமையை நினைத்துக்கூட பார்க்கமுடியாதுள்ளது. வேலைவாய்ப்பு இன்மை, வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்காமை, மேலதிக கொடுப்பனவுகள், மேலதிக வேலை வாய்ப்புகள் இன்மை இவற்றுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருப்போர், கிடைக்கும் வருமானத்தை மிகக் கவனமாக கையாளவேண்டும்.

ஜார்ஜிவாவின் எச்சரிக்கையை சாதாரணமாக எடுத்துக்கொள்ளாது, சாதாரண குடிமகன் வாழ்க்கையை கட்டாயமாக நுட்பமாகத் திட்டமிட்டே வாழ வேண்டும். இல்லையேல், பல பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# 2023 கைகொடுக்குமா?



எம்.எஸ்.எம் ஐயூப்

இலங்கை மக்கள் அரசியல், பொருளாளதார ரீதியில் மிகவும் கொந்தளிப்பான ஒரு வருடத்தை கடந்துவிட்டார்கள்.

பொருளாதார ரீதியில், இவ்வளவு கொந்தளிப்பான காலங்கள் இருந்துள்ளன. அதேபோல், அரசியல் ரீதியாக மிகவும் கொந்தளிப்பான வருடங்களும் இருந்துள்ளன. ஆனால், அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும், இவ்வளவு நெருக்கடிகளைச் சந்தித்த ஒரு வருடம் இருந்ததா என்பது சந்தேகமே! இருந்தால் அது, 1953ஆம் ஆண்டாகத் தான் இருக்க வேண்டும்.

எனினும், 2022ஆம் ஆண்டைப் போல், அந்த ஆண்டு முழுவதும் அரசியல், பொருளாதார நெருக்கடி நீடிக்கவில்லை. கடந்த ஞாயிற்றுக்கிழமை பிறந்த புத்தாண்டு, அந்த நெருக்கடிகளின் நீட்சியாக இருக்குமா அல்லது, அந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வருடமாகுமா என்பதே, இப்போதுள்ள கேள்வியாகும். கடந்த ஆண்டு நாம், இரண்டு ஜனாதிபதிகளையும் மூன்று பிரதமர்களையும் இரண்டு மத்திய வங்கி ஆளுநர்களையும் கண்டோம். இவை, எவரும் விரும்பி இராஜினாமாச் செய்ததன் மூலம் ஏற்பட்ட பதவி மாற்றங்கள் அல்ல. ஒரு சந்தர்ப்பம் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் பொருளாதார நெருக்கடி, ஒருவரைப் பதவியிலிருந்து தூக்கியெறிந்துவிட்டு, மற்றவரைப் பதவியில் அமர்த்தியே இந்தப் பதவி மாற்றங்கள் இடம்பெற்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, கடும்போக்குடையவர் என்று பெயர் பெற்ற ஒருவர், பொருளாதார நெருக்கடியால் வெறிகொண்ட இலட்சக்கணக்கான மக்களின் எழுச்சியைக் கண்டு பயந்து, இந்நாட்டை விட்டே ஓடி, பெரும் அதிகாரங்களையும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி பதவியையும் கைவிட்ட ஒரு வருடமாகும்.

இலங்கை, இது போன்றதொரு மக்கள் எழுச்சியைக் கண்டதேயில்லை. அம்மக்கள், கடந்த வருடம் ஜூலை, ஒன்பதாம் திகதி ஆயுதப் படைகளின் சகல தடைகளையும் உடைத்தெறிந்து, ஜனாதிபதியினதும் பிரதமரினதும் அலுவலகங்களையும் உத்தியோகபூர்வ இல்லங்களையும் கைப்பற்றிக் கொண்டனர்.

காலாட்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளையும் வைத்திருந்த புலிகளை அழித்து, 30 ஆண்டு காலப்போரை முடிவுக்கு கொண்டு வந்ததாக மார்தட்டிக் கொள்ளும் ஒரு பிரதமரை, இந்த மக்கள் எழுச்சி, பதவியை துறக்கச் செய்தமை, கடந்த ஆண்டின் மற்றொரு முக்கிய நிகழ்வாகும்.

இலங்கை, பல தசாப்தங்களாக வெளிநாடுகளிடம் பெற்ற கடனை செலுத்த முடியாது என்று உத்தியோகபூர்வமாக அறிவித்து, தாம் வங்குரோத்து அடைந்திருப்பதை உலகுக்கு அறிவித்த வருடமாகவும் 2022ஆம் ஆண்டு வரலாற்றில் எழுதப்பட்டுவிட்டது. கடந்த ஜூலை மாதம், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, “இலங்கை வங்குரோத்து அடைந்தவிட்டது” என்ற வார்த்தைகளாலேயே பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

கடந்த வருடம் சட்டத்தை மீறாமல், ஜனநாயக மரபுகளைக் கேள்விக்கூத்தாக்கிய வருடமாகவும் குறிப்பிடலாம். கடந்த பொதுத் தேர்தலில், மாவட்ட ரீதியில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தையேனும் பெறாத ஒரு கட்சியின் தலைவர், அதே பாராளுமன்றத்தால், நாட்டின் மிகவும் உயர்ந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால், இங்கு நடைமுறையில் உள்ள ஜனநாயகத்துக்கு ஏதாவது அர்த்தம் உண்டா?

பொருளாதாரத்தை அழித்துவிட்டதாகவும் நாட்டின் இறைமையை வெளிநாட்டவருக்கு தாரைவார்த்துக் கொடுத்ததாகவும், மூன்று மாதங்களுக்கு முன்னர் வரை, பல தசாப்தங்களாக ஒன்றை ஒன்று குற்றஞ்சாட்டிய இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்தே, கடந்த ஜூலை மாதம் இந்த நகைச்சுவையான நிலைமையை உருவாக்கின. இந்தக் கட்சிகளின் தலைவர்கள், மற்றைய கட்சியைப் பற்றிக் கூறியவற்றை நம்பிய அவற்றின் ஆதரவாளர்கள், விழிபிதுங்கிப் பார்த்துக் கொண்டு இருக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்டத்தின் போது, நாட்டில் 13 மணித்தியாலங்கள் வரை மின்வெட்டு அமலாக்கப்பட்டது. பல மைல் நீளமான வரிசைகளில், எரிவாயுக்காகவும் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்களுக்காகவும் மக்கள் காத்திருந்தனர். விலைவாசி கிடுகிடுவென வேகமாக உயர்ந்தது. தற்போது அவ்வாறான மின்வெட்டு அமலில் இல்லை; வரிசைகளும் காண்பதற்கில்லை.

ஆனால், நாட்டில் மேற்கூறப்பட்ட அத்தனை அரசியல் மாற்றங்களையும் தோற்றுவித்த பொருளாதார நெருக்கடி இன்னமும் தீரவில்லை. உலக வங்கி வழங்கிய 70 மில்லியன் டொலர் பணத்தைக் கொண்டு, அரசாங்கம் எரிவாயுவை இறக்குமதி செய்தது. அதனால், இப்போது எரிவாயுவுக்கு வரிசைகள் இல்லை. அந்தப் பணம் முடிவடைந்ததன் பின்னர், அரசாங்கம் என்ன செய்யப்போகிறதோ தெரியாது. அதேபோல், எரிபொருள் விநியோகத்தை ‘கியூஆர்கோட்’ மூலம் சீராக்கியதால், தற்போது எரிபொருளுக்கான வரிசைகளும் இல்லை.

அதேபோல், வெளிநாடுகளிடம் பெற்ற கடனுக்கான வருடாந்தத் தவணைப் பணமும் வட்டியுமாக வருடமொன்றுக்கு சுமார் 6 பில்லியன் டொலர் வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டும். கடந்த ஏப்ரல் மாதம் முதல், அரசாங்கம் முன்னர் பெற்ற வெளிநாட்டு கடன்களை மீள செலுத்தவுமில்லை. அந்தப் பணமும் அரசாங்கத்திடம் இருக்கிறது. அதெல்லாமல், பொருளாதார நெருக்கடி தீரவில்லை. இந்த நிலையிலேயே நாடு, இன்னொரு புதிய ஆண்டில் காலடி எடுத்துவைத்திருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2025ஆம் ஆண்டு, அரசாங்கம் மிகை வரவு செலவுத் திட்டமொன்றை (Surplus budget) சமர்ப்பிக்கும் என்றும் 2048 ஆம் ஆண்டு, இலங்கை சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் போது, இலங்கை பூரண அபிவிருத்தியடைந்த நாடாக இருக்கும் என்றும் கடந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது கூறினார். ஆனால், அதற்கான திட்டவரைபை அவர் முன்வைக்கவில்லை. எனவே அது அவரது வெறும் கனவாகவே, இப்போதைக்கு இருக்கிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, அவர் சர்வதேச நாணய நிதியத்தையே நம்பியிருக்கிறார். இப்போதைக்கு அரசாங்கமும் சர்வதேச நாணயநிதியமும், அதிகாரிகள் மட்ட உடன்பாடொன்றுக்கு வந்துள்ளன. அதை நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அங்கிகரித்தால், நான்கு வருடங்களுக்கு நிதியம் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலரை கடனாக வழங்கும். அத்தோடு, இலங்கைக்கு வழங்கப்பட்டு இருக்கும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க, அதாவது திருப்பிச் செலுத்துவதை நீண்ட காலத்துக்கு ஒத்திப்போட்டு, கடன் தொகையில் ஒரு பகுதியை இரத்துச் செய்ய நிதியம் உதவும்.

ஆனால், நிதியத்திடம் இருந்து அந்தக் கடனைப் பெறுவதற்கும், கடன்களை மறுசீரமைக்கவும் பல முன்நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். பிரதானமாக கடன் மறுசீரமைப்பு விடயத்தில், கடன் வழங்கிய நாடுகளை இணங்கச் செய்ய வேண்டும். அதேவேளை அரசாங்கத்தின் செலவை குறைக்கவும் வருமானத்தை அதிகரிக்கவும், உள்நாட்டில் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதாவது வரிகளை அதிகரிக்க வேண்டும்; புதிய வரிகளை அறிமுகப்படுத்த வேண்டும். அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். அது இப்போது நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அரச வருமானத்தை அதிகரித்து, வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை நீண்ட காலத்துக்கு ஒத்திப் போட்டு, நாணய நிதியத்திடம் இருந்து வருடத்துக்கு சுமார் 750 மில்லியன் டொலர் வீதம் கடன் பெற்றால், அரசாங்கத்தின் மீதான தற்போதைய நெருக்குவாரம் குறைந்து, மூச்செடுக்க அவகாசம் கிடைக்கும். மூச்செடுக்க கிடைக்கும் இந்த அவகாசத்தைப் பாவித்து, அரசாங்கம் வெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கும் நுகர்வுக்காக தொடர்ந்து வெளிநாட்டுக் கடன் பெறாத வகையிலும், நாட்டின் வெளிநாட்டு செலாவணி கையிருப்பை பலப்படுத்த வேண்டும்.

ஏற்றுமதித்துறை, உல்லாசப் பிரயாணத்துறை, வெளிநாட்டு முதலீடுகள் போன்றவை, வெகுவாக விரிவுபடுத்தப்பட்டால் இந்த இலக்கை அடைய முடியும். ஆனால், அதற்கான எந்தவொரு திட்டமும் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேபோல், நாடு இந்த நிலையில் இருந்தாலும் அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகளும் பாரிய அளவிலான ஊழலை கைவிடத் தயாராகவும் இல்லை. இதேகாரணத்தால்த்தான் இதற்கு முன்னர் 16 முறை சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி பெற்றும், நாடு பொருளாதார அபிவிருத்தியை அடையவில்லை. சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டாலும் நிலைமை மாறப் போவதில்லை. ஏனெனில், தமது திட்டங்களையே ஜனாதிபதி அமல் செய்வதாக அக்கட்சியினர் கூறுகின்றனர். அதேபோல், ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான கடந்த அரசாங்கத்தின் காலத்தில், மத்திய வங்கி பிணைமுறி மோசடி போன்ற ஊழல்கள் இடம்பெறும் போது மௌனமாக இருந்தும், வேறு வழிகளிலும் அதனை நியாயப்படுத்தியவர்களே அக்கட்சியிலும் இருக்கிறார்கள்.

நாட்டின் இயற்கை மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான உட்கட்சி கலந்துரையாடல் ஒன்று இடம்பெறுவதாக இருந்தால், அது மக்கள் விடுதலை முன்னணிக்குள் மட்டுமே ஆகும். அக்கட்சித் தலைவர்களுக்கு எதிராக, ஊழல் குற்றச்சாட்டுகளும் இல்லை. ஆனால் அதே காரணத்தால், இந்நாட்டு அதிகார வர்க்கம் அவர்கள் அதிகாரத்துக்கு வருவதை விரும்பமாட்டார்கள். அவர்கள் அதிகாரத்துக்கு வந்தாலும், இந்த அதிகார வர்க்கம் அவர்களது திட்டங்களை குழப்பலாம். அதனை முறியடிக்கும் அளவுக்கு அக்கட்சியைச் சார்ந்த தொழில்சார் நிபுணர்கள் இருக்கிறார்களா என்பதும் சந்தேகமே.

இந்த நிலையில் தான், பொதுமக்கள் இவ்வருடம் தமது எதிர்காலத்தைப் பற்றிய முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அம்மக்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால், அரசியல் பாடங்களை கற்றார்களா என்பதும் சந்தேகமே!



## வாழ்வியல் தரிசனம்

உலகம் இருளில் மூழ்கிக் கிடந்தாலும், அநேகருக்கு உறக்கம் வருவதில்லை. இதைவிடத் துன்பம் வேறில்லை. மனிதர்களுக்கு எத்தனை எத்தனை பிரச்சினைகள்?

இன்ப துன்பங்களை ஒன்றாக எண்ணி, நிர்மல நிலையில் வாழும் பக்குவம் யாவருக்கும் வருவதில்லை. வந்தாலும் அது துறவுநிலை. மறக்க வேண்டியதை மறக்க முடியாது இருக்கிறது. சந்தோச உணர்வை மிகையாகக் காட்டும் மக்கள், துன்பத்திலும் தம்நிலை இழந்து துன்பசாகரத்தில் மூழ்கிவிடுகின்றார்கள். இது மானிட யதார்த்தம்.

இன்னும் சிலர் தங்களுக்கு சந்தோஷம் வந்தாலோ, வரவு மேலோங்கினாலோ எவரையும் கண்டுகொள்வதுமில்லை. தங்களுக்கு ஏதாவது சின்னத் துன்பம் வந்தாலும் கூட, அதுதான் உலக பிரளயத்திலும் அதிகமானது என எண்ணிக்கொள்கின்றார்கள்.

மனித மனம் உடன் பலம் இழந்துவிடுகின்றது. இன்ப, துன்பம் வந்தால், தன்னை மறப்பவர்கள், அது பலவீனம் என எண்ணுவதுமில்லை. இவை இயல்பு. மனஉறுதி முழுமையடைய முயலவேண்டும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மாந்தை கிழக்கு பிரதேச மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வுகாணவும்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக, மாந்தை கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள், பாடசாலைகளுக்கு சென்று திரும்பக் கூடிய வகையில், பஸ் சேவைகள் நடைபெறாததன் காரணமாக, மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று திரும்புவதில் நெருக்கடிகளைத் தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளனர். இதன் காரணமாக, பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

துணுக்காய் வலய கல்வி பணிமனை, முல்லைத்தீவு மாவட்ட செயலகம் போன்ற அலுவலகங்களில் நடைபெற்ற கூட்டங்களில், மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வுகள் எட்டப்படவில்லை.

புதிய ஆண்டிலாவது மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினையை தீர்ப்பதற்கு, மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாந்தை கிழக்கில் தொடர்கின்ற போக்குவரத்து நெருக்கடி காரணமாக, மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகும் நிலைமை உருவாகியுள்ளமை குறித்து, பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

நடராசா கிருஸ்ணகுமார்






# அமைச்சரவை முடிவுகளில் சில...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், திங்கட்கிழமை (02) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட அமைச்சரவை முடிவுகளில் சில...

## மீள்கட்டமைக்கும் வேலைத்திட்டம்

2022 ஆம் ஆண்டுக்கான இடைக்கால மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தை சமர்பிக்கும் போது அரச தொழில் முயற்சியாண்மை நிறுவனங்களை மீள்கட்டமைப்பதற்கான யோசனை ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, தற்போது அரச தொழில் முயற்சியாண்மைகளின் மீள்கட்டமைப்புக்கான செயன்முறைக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் அரச தொழில் முயற்சிகள் மீள்கட்டமைப்பு அலகொன்று நிறுவப்பட்டுள்ளது.

மீள்கட்டமைப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நிறுவனங்களில் ஒருசில அரச நிறுவனங்களாவதுடன், அவ்வாறான ஒருசில கம்பனிகளில் பெரும்பான்மைப் பங்குகள் அரசக்குச் சொந்தமாகவுள்ளது. அத்துடன், ஒருசில அரச தொழில் முயற்சிகள் கூட்டுத்தாபனங்களாக இயங்குகின்றன.

குறித்த இந்நிலைமையின் கீழ் அரச தொழில் முயற்சிகளை மீள்கட்டமைக்கும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் 100 சதவீதமான பங்குகளின் உரித்து திறைசேரியின் செயலாளருக்கு கிடைக்கும் வகையில் திறைசேரியில் இணைப்புச் செய்யப்பட்ட தாய்க் கம்பனியை நிறுவுவதற்கும், மீள்கட்டமைப்பதற்காக அடையாளங் காணப்படுகின்ற அரச தொழில் முயற்சியாண்மைகளை குறித்த தாய்க் கம்பனியுடன் இணைப்புச் செய்யப்பட்ட கம்பனியாக பதிவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை தயாரிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## சமவாயத்தை ஏற்றுக்கொள்ளல்

பிரத்தியேக சட்டங்களை ஒருங்கிணைக்கும் சர்வதேச நிறுவனம் மற்றும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் அனுசரணையுடன் 2001 ஆம் ஆண்டு, நகரும் சாதனங்கள் தொடர்பான சர்வதேச உரிமைகள் பற்றிய கேப்டவுன் சமவாயம் மற்றும் வானூர்தி உபகரணங்களுக்கான விசேட விடயங்கள் தொடர்பான நகரும் சாதனங்கள் தொடர்பான சர்வதேச உரிமைகள் பற்றிய உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

குறித்த சமவாயத்தை ஏற்றுக் கொள்வதற்கும், அதற்குரிய ஏற்பாடுகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களை வகுப்பதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## பணிமுறை முன்னேற்பாடு

எமது நாட்டிலிருந்து 33 வகையான உணவு உற்பத்திகள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக சீனக் குடியரசின் பொதுச் சுங்க நிர்வாகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 29 உற்பத்திகள் நீரியல் வள உற்பத்திகளாக காணப்படுவதுடன், சீனக் குடியரசில் பதிவு செய்யப்பட்ட இலங்கைக் கம்பனிகளில் 38 கம்பனிகள் குறித்த ஏற்றுமதிகளை மேற்கொண்டு வருகின்றன.

சீனாவுக்கு நீரியல் வள உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும், மற்றும் ஊக்குவிப்பதற்கும் இயலுமாகும் வகையில் இலங்கையிலிருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சமுத்திர மீன்பிடி நீரியல் வள உற்பத்திகளைப் பரிசோதித்தல், தொற்றுக்காப்பு செய்தல் மற்றும் கால்நடைகள் சுகாதாரப் பாதுகாப்பு தேவைகள் தொடர்பான அறிவியல் சோதனைப் பணிமுறை முன்னேற்பாடு சீனக் குடியரசின் பொது சுங்க நிர்வாகம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கடற்றொழில் அமைச்சுக்கும் இடையில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## அலகொன்றை நிறுவுதல்

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நகர்ப்புறப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் செயன்முறையைத் துரிதப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, தற்போது நடைமுறையிலுள்ள அபிவிருத்தி விண்ணப்பங்களைத் தயார்படுத்தும் செயன்முறையை மேம்படுத்தி ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அலகொன்றை நிறுவுவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## விற்பனை செய்தல்

அரச ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள 608 வீட்டு அலகுகள் மற்றும் 05 வர்த்தக அலகுகளுடன் கூடிய 24 அடுக்குமாடிகளைக் கொண்ட பெலன்கஸ்துடுவ, பொரல்ல ஓவல் வியூ றெசிடன்சீஸ் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு வதிவிடதார உரித்து வதிவிடக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வதிவிடக்காரர்களுக்கு அறுதி உறுதி உரிமைத்தத்துவத்தை வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## மீள்நோக்கு 4 ஆவது காலவரிசை

2006 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கமைய அனைத்து உறுப்பு நாடுகளும் உலகளாவிய காலவாரியான மீள்நோக்கு உட்பட்டு செயற்படல் வேண்டும். அதனால், உறுப்பு நாடுகளில் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், மற்றும் குறித்த நாடுகளில் மனித உரிமைகளுக்கான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

அனைத்து உறுப்பு நாடுகளின் அரசுகள் தமது மீள்நோக்குகளை 4 ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கை இதுவரைக்கும் 3 காலவரிசை மீள்நோக்கு அமர்வுகளில் பங்குபற்றியுள்ளதுடன், அடுத்துவரும் மீள்நோக்கு காலவரிசை அமர்வு 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

4 ஆவது காலவரிசை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள, இலங்கையின் தேசிய அறிக்கைகள் மூலம் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்நோக்குகளிலிருந்து இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பான சுயமதிப்பீட்டை சமர்ப்பிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## பிரதேச செயலாளர் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளல்

தற்போது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான காணிக் கையுதிர்த்தலுக்கான அதிகாரம் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கும், அத்தோடு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளைக் கையுதிர்ப்பதற்கான அதிகாரம் குறித்த ஆணைக்குழுவுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குரிய நோக்கங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால், குறித்த இரண்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த அரச காணிகளைக் கையுதிர்த்தல் தொடர்பான அனைத்து அடிப்படைச் செயற்பாடுகளும் பிரதேச செயலாளர்கள் ஊடாக மாத்திரம் மேற்கொள்வதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய, அரச காணிகளைக் கையுதிர்த்தல் தொடர்பாக தற்போது காணப்படுகின்ற அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஆராய்ந்து, அறிமுகப்படுத்த வேண்டிய புதிய சட்ட ரீதியான திருத்தங்கள் உள்ளடங்கலாக, அரச காணிகளை கையுதிர்த்தல் தொடர்பான கொள்கையை வகுப்பதற்கும், மற்றும் தேவையான வழிகாட்டல்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கும் ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

புது டெல்லி

புதுடெல்லியில் கொடூரம்

# யுவதியை நிர்வாணமாக 13 கி.மீ இழுத்து சென்ற கார்

புதுடெல்லியில் ஸ்கூட்டரில் சென்ற இளம்பெண்ணை நிர்வாண நிலையில், காரொன்று சுமார் 13 கிலோ மீற்றர் இழுத்துச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் (02) அதிகாலை 3.30 மணியளவில் ‘அஞ்சலி சிங்‘ என்ற 20 வயதான யுவதியொருவர் , கஞ்சவாலா பகுதியில், ஸ்கூட்டரில் பயணித்துக் கொண்டிருந்த போது, மதுபோதையில் 5 பேர் பயணித்த காரொன்று அவர் மீது மோதியுள்ளது.



இதன்போது யுவதியின் உடைகள் காரின் சக்கரம் ஒன்றில் சிக்கிய நிலையில் குறித்த காரானது காரை நிறுத்துவதற்குப் பதிலாக, யுவதியின் உடலை 13 கிலோமீற்றர் வரை இழுத்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் இச்சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த நபர் ஒருவர், இது குறித்து உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மு.ப 4.40 மணியளவில் சுல்தான்புரி பகுதியில் நிர்வாண நிலையில், படுகாயங்களுக்குள்ளான யுவதியின் சடலத்தை மீட்ட பொலிஸார், அக்காரின் இலக்கத்தை வைத்து குறித்த ஐவரையும் கைது செய்தனர்.

விசாரணையில் ‘குறித்த யுவதிக்கு 4 தங்கைகள், 2 தம்பிகள் உள்ளனர் எனவும், அவரது குடும்பத்தில் அவர் மாத்திரமே பணிபுரிபவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காரில் வந்தவர்கள் அஞ்சலியைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியிருக்காலம் எனவும் அஞ்சலியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம்” கைது செய்யப்பட்ட ஐவரும் ”எங்களுக்கு எதுவுமே தெரியாது, நாங்கள் விபத்தை ஏற்படுத்தவில்லை. நாங்கள் காரில் சென்று கொண்டு இருந்தோம். உள்ளே சத்தமாக பாடல் ஒலிக்கப்பட்டிருந்தது. அதனால் எங்களுக்கு எதுவும் தெரியவில்லை.

எங்களைப் பொலிஸார் கைது செய்த போதுதான் இச் சம்பவமே எங்களுக்கு தெரிந்தது ”என்று கூறியுள்ளனர்.

அதேசமயம் இச்சம்பவம் தொடர்பான அதிர்ச்சி அளிக்கும் வீடியோக்கள் இணையத்தில்



வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட ஐவருக்கும் தண்டனை வழங்கக்கோரி சுல்தான்புரி காவல்நிலையத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

எவ்வாறு இருப்பினும் யுவதியின் உடற்கூறாய்வு அறிக்கையின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “அண்ணாமலையால் பாதுகாப்பு இல்லை”

‘அண்ணாமலை தலைமையிலான தமிழக பாரதிய ஜனதா கட்சியில் இருந்து விலகுவதாக‘ நடிகையும், அரசியல்வாதியுமான காயத்ரி ரகுராம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக காயத்ரி ரகுராம் தனது ட்விட்டரில்” பெண்களுக்கு மரியாதை, சம உரிமை இல்லாத தமிழக பா.ஜ.கவில் இருந்து வெளியேறும் முடிவை கனத்த இதயத்துடன் எடுக்கின்றேன்.

அண்ணாமலை தலைமையின் கீழ் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. பா.ஜ.கவின் உண்மைத் தொண்டர்கள் குறித்து யாரும் கவலை கொள்வதில்லை. உண்மை தொண்டர்களைக் கட்சியில் இருந்து விரட்டுவது மாத்திரமே அண்ணாமலைக்கு ஒரே குறிக்கோளாக உள்ளது. நான் எடுத்த முடிவுக்கு அண்ணாமலையே காரணம்” இவ்வாறு பதிவிட்டுள்ளார்.



சென்னை

# மயிரிழையில் உயிர் தப்பிய 167 பேர்

சென்னையில் இருந்து கோலாம்பூர் நோக்கி நேற்று முன்தினம் (02) மு.ப 11.45 மணியளவில் பயணிகள் விமானமொன்று புறப்படத் தயாரானது.

இந்நிலையில் விமானத்தில் பயணிகளை ஏற்றுவதற்கு முன்னர் விமானத்தை சரிபார்த்த விமானி, அதில் இயந்திரக் கோளாறு இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்.

இதனையடுத்து இது குறித்து உடனடியாகசென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு விமானி தகவல் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த விமானப் பயணம் இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் விமானி தகுந்த நேரத்தில் இயந்திரக்கோளாறை கண்டுபிடித்துவிட்டதால் விமானத்தில் செல்ல இருந்த 159 பயணிகள், 8 விமான ஊழியர்கள் என 167 பேரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உத்தர பிரதேசம்

# 3,000 கி. மீ கடந்த ராகுல் காந்தியின் யாத்திரை

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, ‘இந்திய ஒற்றுமை பயணம்’ என்ற பெயரில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, பாதயாத்திரையொன்றை மேற்கொண்டு வருகின்றார்.

அந்தவகையில் கன்னியாகுமரியில் கடந்த செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி தொடங்கிய இப்பாத யாத்திரையானது ‘தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், மராட்டியம் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களைக் கடந்து தற்போது உத்தரபிரதேசத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அந்தவகையில் ”இந்திய வரலாற்றில் எந்த ஒரு இந்திய அரசியல்வாதியும் மேற்கொள்ளாத மிக நீண்ட நடைப்பயணம் இது” என காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அதே சமயம் மொத்தம் 110 நாட்களுக்கும் மேலாக நடைபெற்றுவரும் இந்த யாத்திரையானது இதுவரை 3,000 கிலோமீற்றர் தூரம் வரை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# மனித உடல்களை உரமாக்க முடிவு

மனித உடல்களை உரமாக்க அனுமதி வழங்கியுள்ள அமெரிக்க மாநிலங்களின் பட்டியலில் தற்போது நியூயோர்க்கும் இணைந்துள்ளது.

உடலை எரித்தல் மற்றும் அடக்கம் செய்தல் ஆகியவற்றுக்கு மாற்றாக, சுற்றுச் சூழலுக்கு நன்மை பயக்கும் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகின்றது.



கடந்த 2019 ஆம் ஆண்டு இம் முறையை முதன் முதலாக வொஷிங்டன் சட்டப்பூர்வ மாக்கியது.

இதனைத் தொடர்ந்து கொலராடோ, ஓரிகான், வெர்மான்ட் மற்றும் கலிபோர்னியா போன்ற மாநிலங்களும் இதனை சட்டபூர்வ மாக்கியது.

அந்த வகையில் கடந்த சனிக்கிழமை அன்று மாகாண ஆளுநர் கேத்தி ஹோச்சுல் அனுமதி வழங்கியதை அடுத்து இப்பட்டியலில் 6ஆவது மாநிலமாக நியூயோர்க்கும் இணைந்துள்ளது.



பாகிஸ்தான்

## பாகிஸ்தானைக் கேலி செய்யும் தலிபான் தலைவர்

1971ஆம் ஆண்டு பாகிஸ்தான் இந்தியாவிடம் சரணடைந்த புகைப்படத்தை பகிர்ந்து, பாகிஸ்தானைத் தலிபான் தலைவர் கேலி செய்துள்ளார்.

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் இடையே வார்த்தை மோதல் நிலவிவரும் நிலையில், தலிபான் தலைவரும் துணைப் பிரதமருமான அகமது யாசிர், வங்கதேசம் உருவாகுவதற்கு வழிவகுத்த 1971ஆம் ஆண்டு போரில் பாகிஸ்தான் தோல்வியை ஏற்றுக்கொண்டு டாக்காவில் கையெழுத்திட்ட புகைப்படத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து கேலி செய்துள்ளார்.

அதே சமயம் “எங்கள் மீதான இராணுவத் தாக்குதல் குறித்து பாகிஸ்தான் நினைத்துப் பார்க்க வேண்டாம். எங்கள் மீது நடத்தப்படும் எந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கும் தகுந்த பதிலடி கொடுக்கப்படும்” எனவும் ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா

## “டொய்லெட் பேப்பர் கொண்டு வாருங்கள்”

### ஊழியர்களுக்கு டுவிட்டர் உத்தரவு

அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரிலுள்ள டுவிட்டர் தலைமையகத்தில் தூய்மைப் பணியாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்காரணமாக குறித்த அலுவலகம் அலங்கோலமாகக் காட்சியளிப்பதாகவும், குறிப்பாக கழிவறைகளில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும், இதனால் ஊழியர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் ஊழியர்களை வீட்டிலிருந்து டொய்லட் பேப்பர்களைக் கொண்டுவரும் படி டுவிட்டர் நிறுவனம் உத்தரவிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## அவெஞ்சர்ஸ் நடிகர் கவலைக்கிடம்





‘அவெஞ்சர்ஸ், மிஷன் இம்பாசிபிள்’ உள்ளிட்ட பல திரைப்படங்களில் நடித்தவர் பிரபல ஹொலிவூட் நடிகர் ஜெரமி ரெனர்.

51 வயதான இவர், நெவாடா மாநிலத்தில் வசித்து வருகின்றார். இந்நிலையில் நேற்று முன்தினம் ( 02) தனது வீட்டருகே குவிந்திருந்த பனியை அகற்ற முற்பட்டபோது எதிர்பாராவிதமாக நேர்ந்த விபத்தில் அவர் படுகாயமடைந்தார்.

இந்நிலையில் அவருக்குத் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



## ஒரே நேரத்தில் 2 வகையான புற்றுநோய்

பிரபலமுன்னாள் டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா நவ்ரதிலோவா தொண்டை மற்றும் மார்பக புற்றுநோயால் அவதியுற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டென்னிஸில் 18 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற வீராங்கனை மார்டினா நவ்ரதிலோவா, 1978 மற்றும் 1990களுக்கு இடையில் 9 விம்பிள்டன் ஒற்றையர் பட்டங்களை வென்று சாதனை படைத்தார்.

தற்போது 66 வயதாகும் மார்டினா, ஓய்வு பெற்ற பின்னர் வர்ணனையாளராக மாறியுள்ளார்.

இந்நிலையில், சமீபத்தில் உடல் பரிசோதனை செய்ததில், இவருக்கு தொண்டை மற்றும் மார்பகத்தில் புற்றுநோய் ஆரம்ப நிலையில் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து இம் மாத இறுதியில் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு மார்டினா செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

## ஆச்சரியமூட்டும் ‘லேக் ஹில்லியேர்’

அவுஸ்திரேலியாவில் லேக் ஹில்லியேர் (Lake Hillier) என்ற இளம் சிவப்பு நிற ஏரியொன்று உள்ளது.

சுமார் 600 மீற்றர் நீளமும் 250 மீற்றர் அகலமும் கொண்ட இவ் ஏரியானது இளம் சிவப்பு நிறத்தில் காணப்படுவதற்கு இதில் வாழும் சிவப்பு நிற நுண்ணுயிரிகளே காரணம் என அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.



## விமான நிலையத்தில் மின்தடை

பிலிப்பைன்ஸ்

### ஆயிரக்கணக்கான பயணிகள் அவதி

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில்புத்தாண்டு தினத்தன்று ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக விமானப் போக்குவரத்து முடங்கியது.

குறிப்பாக விமான நிலையத்தின் செர்வர்கள் முடங்கியதால் 361 விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாகவும், இதனால் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய 65,000 பயணிகள் பாதிப்புக்கு உள்ளாகினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதே சமயம் மின்தடை காரணமாக மணிலா வழியாகச் செல்லக்கூடிய விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கப்படவில்லை என்றும், வெவ்வேறு நாடுகளுக்கு அந்த விமானங்கள் திருப்பி விடப்பட்டதாகவும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முதலாவது இனிங்ஸில் 449 ஓட்டங்களை பெற்ற நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் முதலாவது இனிங்ஸில் 449 ஓட்டங்களை நியூசிலாந்து பெற்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், கராச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் டிம் செளதி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, டொம் லேதம், டெவோன் கொன்வே மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. பின்னர் 71 ஓட்டங்களுடன் நசீம் ஷாவிடம் லேதம் வீழ்ந்தார். தொடர்ந்து வந்த கேன் வில்லியம்ஸனும், கொன்வேயும் இணைந்து இனிங்ஸை நகர்த்திய நிலையில், சிறிய இடைவெளிகளில் 122 ஓட்டங்களுடன் அக்ஹா சல்மானிடம் கொன்வேயும், ஷாவிடம் 36 ஓட்டங்களுடன் வில்லியம்ஸனும் வீழ்ந்தனர்.

தொடர்ந்து வந்த டரைல் மிற்செல், 26 ஓட்டங்களுடன் ஹென்றி நிக்கொல்ஸ் ஆகியோர் குறிப்பிட்ட இடைவெளிகளில் சல்மானிடம் வீழ்ந்ததோடு, மிஷெல் பிறேஸ்வெல்லும் அப்றாஹ் அஹ்மட்டிடம் வந்தவுடனேயே ஆட்டமிழந்திருந்தார்.



பின்னர் இஷ் சோதி ஷாவிடம் வீழ்ந்ததோடு, 51 ஓட்டங்களுடன் டொம் பிளன்டலும், செளதியும் அஹ்மட்டிடம் வீழ்ந்தனர். இந்நிலையில், இறுதி விக்கெட்டுக்காக மற் ஹென்றியும், அஜாஸ் பட்டேலும் சத இணைப்பாட்டத்தை பகர்ந்த நிலையில், 35 ஓட்டங்களுடன் அஹ்மட்டிடம் பட்டேல் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 449 ஓட்டங்களை நியூசிலாந்து பெற்றது. ஹென்றி ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



## இன்டர் மிலனிலிருந்து வெளியேறும் டம்பிறைஸ்?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மிலனின் வலது பின்களவீரரான டென்ஸில் டம்ஃபிறைஸைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான செல்சி, மன்செஸ்டர் யுனைட்டெட், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் ஆகியன எதிர்பார்த்துள்ளன.

26 வயதான டம்பிறைஸைக் கைச்சாத்திடுவதை கடந்த பருவகாலத்தில் மிலன் நிராகரித்திருந்த நிலையில், உலகக் கிண்ணத்தில் சிறப்பான செயற்பாடு காரணமாக மீண்டும் டம்பிறைஸைக் கைச்சாத்திடும் ஆர்வம் தோன்றியுள்ளது.

காயங்களால் அவதியுறும் றீஸ் ஜேம்ஸுக்கு மாற்றீடொன்றாக செல்சியும், டியகோ டலொட், ஆரோன் வான்-பிஸாகாவைத் தாண்டி வலது பின்களத்தில் தெரிவொன்றாக யுனைட்டெட்டும் நோக்குகின்றன.

## செல்சியில் நீடிக்கப் போகும் கன்டே?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் மத்தியகளவீரரான என்கலோ கன்டே, அக்கழகத்துடன் புதிய ஒப்பந்தமொன்றில் தற்போது கைச்சாத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

செல்சியுடனான கன்டேயின் ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்ற நிலையில், அவரைக் கைச்சாத்திடும் ஆர்வத்தை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா, சவுதி அரேபியக் கழகமான அல் நஸார் ஆகியவை வெளிப்படுத்தியிருந்தன.



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டம்:

## இரண்டாமிடம் பெற்ற ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயம்



அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுக்குட்பட்டோருக்கான எறிபந்தாட்டத்தில் ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்றது.

ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியின் ஆண்கள், பெண்கள் பிரிவில் இரண்டாமிடம் பெற்ற இக்ரஹ் வித்தியாலயம், தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்ரஹ் வித்தியாலயத்தின் இரண்டு அணிகளும் பாடசாலை அதிபர் எம்.எஸ். எம். றிஸ்மின் தலைமையில் வழிநடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 04 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.